| **கூடுதல்** | | | | **2,00,13,368** | **1,30,85,013** | **3,16,85,933** | **6,47,84,314** | **72,25,638.90** |

மேலும் பட்டியலில் கண்டபடி சப்கா விஸ்வாஸ் திட்டத்தின் கீழ் ரூ.**72,25,638.90** தொகை செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் மேற்படி பட்டியலில் கண்ட வழக்குகள்படி மாநகராட்சி செலுத்த வேண்டிய தொகை ரூ.**6,47,84,314** இதனால் மாநகராட்சிக்கு நிதி சேமிப்பு ரூ.**57558675.10.**

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்ட மாநகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய கலால் மற்றும் சேவை வரித்தொகை செலுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) தற்போது அமலில் உள்ள சப்கா விஸ்வாஸ் திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையில் சேவை வரி செலுத்த அனுமதி வழங்கலாம். இதனால் மாநகராட்சிக்கு ரூ.**57558675.10** சேமிப்பாகும்.
3) மேற்கண்ட சேவை வரி கட்டணத்தை ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலுத்தப்பட்டதற்கும் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.**4587/2014**/எம்சிஏ5)

**31.03.2020** — **534.** தஞ்சாவூர் மாநகராட்சி எண்.**123** ஜெயில் தெரு, பாலக்கரை, திருச்சி என்ற முகவரியில் வசிக்கும் திரு சதீஸ்வரன் த/பெ. ஜனகராஜ் என்பவர் தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் டவுன் முனிசிபல் வார்டு **6** பில்லுக்காரத்தெரு பிளாக்–**14** சர்வே எண்.**883–884** மற்றும் சர்வே எண்.**885**–ல் உள்ள **12222** சதுர அடி இடம் தொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் OS 364/2019–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக மாநகர் மன்ற வழக்கறிஞர் திரு அய்யா வெற்றிச்செல்வன் அவர்கள் ஆஜராகி எதிர் வழக்காட செய்யவும், இவ்வழக்கில் ஏற்படும் செலவுகளை ஏற்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அனுமதிக்கப் பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கலாம். (ந.க.எண்.2641/2020/சி4) | |
| 31.03.2020 | 535. | தஞ்சாவூர் மாநகராட்சி பகுதி No.456 அண்ணா சாலை, கீழவாசல் என்ற முகவரியில் வசித்து வரும் திரு முகமது ஹருன்பாட்சா என்பவர் தஞ்சாவூர் டவுன் வார்டு 5 அறிஞர் அண்ணா சாலை, மார்கெட் ரோடு, கீழவாசல், T.S.No.456/P/14 கீழமேல் 60 அடி தென்வடல் மேல்புறம் 38 அடி கீழ்புறம் 113 அடி ஆக கூடுதல் 9890 ச.அடி விஸ்தீரணமுள்ள இடம் சம்பந்தமாக தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 50/2020–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக மாநகர் மன்ற வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி எதிர் வழக்காட செய்யவும், இவ்வழக்கில் ஏற்படும் செலவுகளை ஏற்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். (ந.க.எண்.3361/2020/சி4) | அனுமதிக்கப் பட்டது |
| 31.03.2020 | 536. | தஞ்சாவூர் மாநகராட்சி No.179 5ம் தெரு அருளானந்த நகர், தஞ்சாவூர் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி J.சித்ரா W/o. N.ஜெயக்குமார் என்பவர் முனிசிபல் 3வது வார்டு பிளாக் எண் 25 காந்திஜி ரோடு நகர புல எண். 1319–ல் கூடுதல் விஸ்தீரணம் 2691 சதுர அடி தொடர்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 70/2020–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக மாநகர் மன்ற வழக்கறிஞர் திரு அய்யா வெற்றிச்செல்வன் அவர்கள் ஆஜராகி எதிர் வழக்காட செய்யவும், இவ்வழக்கில் ஏற்படும் செலவுகளை ஏற்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். (ந.க.எண்.3858/2020/சி4) | அனுமதிக்கப் பட்டது |
| 31.03.2020 | 537. | இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த திருமதி எம்.வி.ராதாருக்மணி (அமைப்பாளர் ஓய்வு) என்பவர் அரசு உதவி பெறும் சக்தி விநாயகா தொடக்கப்பள்ளி சத்துணவு மையத்தில் பணிபுரிந்து 31.05.2018–ல் ஓய்வு பெற்ற அமைப்பாளர் திருமதி ஏ.பானுமதி என்பவருக்கு ரூ.60,000/– வழங்கியதை திரும்ப பெற்று தர வேண்டி மாநகராட்சிக்கு எதிராக தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் O.S.எண்.380/2019–ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக மாமன்ற வழக்கறிஞர் திரு அய்யா வெற்றிச்செல்வன் அவர்கள் மூலம் ஆஜராகி எதிர் வழக்காடவும், இவ்வழக்கில் ஏற்படும் செலவுகளை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். (ந.க.எண்.3599/2020/சி8) | அனுமதிக்கப் பட்டது |
| 31.03.2020 | 538. | எதிர்வர இருக்கும் 05.2.2020 அன்று தஞ்சை பெரியகோவில் குடமுழுக்கு விழா நடைபெற இருப்பதை முன்னிட்டு இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்படி பெரியகோவில் குடமுழுக்கு விழாவிற்கு பொது மக்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் வர இருப்பதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | செயல்முறை ஆணை ந.க.எண்.ஜி3/1759/2019 நாள் 12.12.2019ன்படியும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் நேர்முக அறிவுரைப்படியும் தஞ்சாவூர் பெரிய கோவிலை சுற்றியுள்ள சாலைகளை மேம்படுத்த குறிப்பிடப்பட்டுள்ளதின் பேரில் மேற்படி பெரிய கோவில் சுற்றியுள்ள சாலைகளை மேம்படுத்த குறிப்பிடப்பட்டுள்ளதின் பேரில் மேற்படி பெரிய கோவில் சுற்றியுள்ள R.M.H சாலை, தென்கீழ் அலங்க சாலை, பிரதாபசிம்மபுரம் முதல் சிவாஜி நகர் வரை உள்ள சாலைகள் பருவ மழையில் முற்றிலும் சேதமடைந்து வாகனங்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதினை அரசாணை நிலை எண்.137 நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 15.09.2015ன்படி ரூ.34.55 இலட்சம் அனுமதிக்கப்பட்டதில் செலவு செய்தது போக மீதம் உள்ள தொகையில் மேற்படி சாலைகளை புனரமைக்க மேற்படி திட்டத்தின் கீழ் பணி செய்ய வேலை ஆணை வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் திரு தேவேந்திரன் மூலம் அதே விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>3) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.ஜி3/1759/2019, நாள் 12.12.2019 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.9268/2015/எம்சிஇ1) | |
| 31.03.2020 | **539.** தஞ்சாவூர் பெருவுடையார் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழாவை முன்னிட்டு பல்வேறு நகராட்சிகளில் இருந்து துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் ஆகியோர்கள் இம்மாநகராட்சிக்கு கூடுதல் பணி பார்க்க வரவழைக்கப்பட்டனர். மேற்படி பணியாளர்கள் Youth Hostel, Thanjavur என்ற இடத்தில் தங்குவதற்கு இம்மாநகராட்சி மூலம் வாடகை முறையில் தங்குமிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதற்கான செலவினத் தொகை ரூ.20,520/–ஐ Youth Hostel, Thanjavur என்ற நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>பட்டியல் தொகை ரூ.20,520/–ஐ CSR நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.14668/2019/எம்சிஇ4) | அனுமதிக்கப் பட்டது |
| 31.03.2020 | **540.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான வெண்ணாறு தலைமை நீரேற்று நிலையத்தில் கணபதி நகர் நீருந்து நிலையத்திற்கு நீரேற்றம் செய்யும் Vertical Turbine Pumpsetல் Unit-II மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. Unit-I பழுதடைந்து உள்ளது. எனவே, Unit-I-க்கு உரிய பம்பில் 3.5X1.25” கப்ளிங 2 எண்ணம் மற்றும் Spider bush இரண்டு எண்ணமும் புதியது வாங்கி பொருத்தி சீர் செய்யவும் மற்றும் 2 எண்ணம் 120 HP VT Motor-ஐ Recondition செய்யவும், Transformer-க்கு 100 லிட்டர் Transformer ஆயில் வாங்கி சப்ளை செய்தல் போன்ற பணிகளை | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6,60,000/—ஐ (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.6,60,000/—க்கு (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019—2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.595/2020/எம்சிஇ4) | |
| 31.03.2020 | 541. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கரந்தை நீர்த்தேக்கத்தொட்டியில் இருந்து S.A.ஆனந்த நகர், கோடியம்மன் கோவில், சத்திய கிருஷ்ணா நகர் வழியாக செல்லும் குடிநீர் பிரதான பகிர்மான குழாய் விரிசல் ஏற்பட்டு தண்ணீர் முழுவதும் சாலையில் வெளியேறுகிறது. மேற்படி குடிநீர் பகிர்மான குழாய் 14” பழைய RCC Pipe அடிக்கடி விரிசல் ஏற்படுவதால் அதனை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே அந்த இடத்தில் புதிதாக D1, 150 mm குடிநீர் பகிர்மான குழாய் பதித்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.15,00,000/—ஐ (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.15,00,000/—க்கு (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) உதவி பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரின் 10.03.2020 குறிப்பின்படி மேற்கண்ட பணி Smart City திட்ட Scope-ல் இல்லாத காரணத்தால் மேற்கண்ட பணிக்கான செலவினை 2019—2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.502/2020/எம்சிஇ4) | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| 31.03.2020 | 542. தஞ்சாவூர் மாநகராட்சியில் பொது நிதி 2018—19 மண்டலம்—II வார்டு எண்.21 சீனிவாசபுரம் குப்பைக்கிடங்கில் குப்பைகள் கொட்ட வரும் இம்மாநகராட்சி வாகனங்களுக்கு பாதை அமைத்து கொடுப்பது மற்றும் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை JCB மற்றும் HITTACHI இயந்திரங்களை கொண்டு சமன்படுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு திரு ஜி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர் என்பவரது | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுகொண்டு 500 மணி நேரம் வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள இவ்வலுவலக வேலை ஆணை ந.க.எண்.2006/2019/எம்சிஇ4, நாள் 24.12.2018 முதல் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.468 நாள் 08.03.2019ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்டுள்ள விவரப்படி தற்போது 500 மணி நேரம் முடிவடையும் நிலையில் உள்ளதால், இப்பணியினை தொடர்ந்து செயல்படுத்திட ரூ.21.00 இலட்சம் செலவினத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தொடர்ந்து, தஞ்சாவூர் சட்டமன்ற இடைத்தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் ஆகியவற்றிற்கு தேர்தல் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் இப்பணிக்கு தற்போது ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.<br>எனவே, தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி செய்ய இயலாத சூழ்நிலையாலும், திரு ஜி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர் தனது 25.03.2019ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தொடர்ந்து பணி செய்ய சம்மதம் தெரிவித்துள்ளபடியாலும், அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் பணிகள் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி செய்ய உரிய கால அவகாசம் இல்லாததால் ஏற்கனவே பணி செய்து வரும் திரு ஜி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணிகள் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) இப்பணியினை தொடர்ந்து செயல்படுத்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.21.00 இலட்சம் பொது நிதி செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2006/2018/எம்சிஇ4) | |
| 31.03.2020 | 543. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 AC 5403 குடிநீர் லாரி வாகனத்தின் பழுதுகளை சீர் செய்து வழங்கும் பணிக்கு தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர்–1 அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/592/2019, நாள் 12.03.2020ன்படி மதிப்பீடுகள் கூராய்வு செய்து பெறப்பட்டதில் மேற்படி பணிக்கு தொகையான ரூ.1,90,797/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து தொன்னூறாயிரத்து எழுநூற்றி தொன்னூற்றி ஏழு மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட வாகனத்தின் பழுதுகள் சீர் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,90,797/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து தொன்னூறாயிரத்து எழுநூற்றி தொன்னூற்றி ஏழு மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் | தானியங்கி பொறியாளர் கடிதம் பதிவு செய்யப்பட்டு அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>4) அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர்–1 அவர்களின் கடிதம் ந.க.எண்.அ3/592/2019, நாள் 12.03.2020 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>(ந.க.எண்.7376/2019/எம்சிஇ5) | |
| 31.03.2020 | 544. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 AP 7797 காம்பேக்டர் வாகனத்தின் பழுதுகளை சீர் செய்து, தகுதிச்சான்று புதுப்பித்து வழங்கும் பணிக்கு அரசு தானியங்கி பொறியாளர், தஞ்சாவூர் அலுவலக ந.க.எண்.அ3/1048/2019, நாள் 22.11.2019ன்படி வழங்கிய தடையின்மை சான்றின்படியும், அரசு தானியங்கி பொறியாளர், தஞ்சாவூர் அலுவலக ந.க.எண்.அ3/1048/2019, நாள் 07.01.2020ன்படி பணி பார்க்க அனுமதித்த தொகையின் அடிப்படையில் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து 10.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>வ.எண் \| ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் \| ஒப்பந்தப்புள்ளி தொகை<br>1. \| M/s. Shiv Motors, Kumbakonam \| ரூ. 2,25,000/–<br>2. \| M/s. Tamil Nadu Agro Service Centre, Tiruvarur \| ரூ. 2,32,814/–<br><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட நிறுவனங்களில் வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s. Shiv Motors, Kumbakonam என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,25,000/–ஐ மாமன்றம் ஏற்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி பணிக்கு M/s. Shiv Motors, Kumbakonam நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.12818/2019/எம்சிஇ5) | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| 31.03.2020 | 545. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 L 3850 டிப்பர் டிராக்டர் வாகனத்தின் பழுதுகளை சீர் செய்யும் பணிக்கு அரசு தானியங்கி பொறியாளர், தஞ்சாவூர் அலுவலக ந.க.எண்.அ3/1048/2019, நாள் 22.11.2019ன்படி வழங்கிய தடையின்மை சான்றின்படியும், அரசு தானியங்கி பொறியாளர், தஞ்சாவூர் அலுவலக ந.க.எண்.அ3/1048/2019, நாள் 07.01.2020ன்படி பணி பார்க்க அனுமதித்த தொகையின் அடிப்படையில் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து 10.03.2020 அன்று மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | M/s. Shiv Motors, Kumbakonam | ரூ. 1,52,000/– |
| 2. | M/s. Tamil Nadu Agro Service Centre, Tiruvarur | ரூ. 1,57,400/– |

அலுவலகக்குறிப்பு:

1) மேற்கண்ட நிறுவனங்களில் வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s. Shiv Motors, Kumbakonam என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,52,000/–ஐ மாமன்றம் ஏற்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி பணிக்கு M/s. Shiv Motors, Kumbakonam நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9448/2019/எம்சிஇ5)

31.03.2020

546. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–20ம் ஆண்டின் கீழ் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.2101/2019/அ2, நாள் 25.02.2020ன்படி இம்மாநகராட்சிக்கு கீழ்கண்ட பணிகளை ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.16 காவேரி அக்கா சந்து பகுதியில் சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | 6.00 |
| 2. | இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.16 ஜெம்பகவள்ளி அம்மா சந்து பகுதியில் சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | 6.00 |
| 3. | இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 பள்ளியக்ரஹாரம் தெற்குத்தெரு பொத்து நாயக்கன் சந்து பகுதியில் சிமிண்ட் சாலை மைக்கும் பணி | 1.50 |
| 4. | இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 கிருஷ்ணன் கோயில் 1ம் தெருவில் உள்ள குறுக்குச்சந்து பகுதியில் கான்கிரீட் சாலை (30 மீட்டர்) அமைக்கும் பணி | 1.50 |
| 5. | இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.34 துளஜாபுரம் பகுதியில் சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | 8.50 |
| 6. | இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.51 நெய்தல் நகரில் கான்கிரீட் | 10.00 |

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>நடைபாதை அமைக்கும் பணி</td><td></td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>33,50,000</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து சட்டமன்ற உறுப்பினர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2101/2019/அ2, நாள் 25.02.2020 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2609/2020/எம்சிஇ6)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.03.2020</td>
<td>547.</td>
<td>
தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளில் சோடியம் ஆவி மற்றும் MHL விளக்குகளை சீர்மிகு நகர திட்டத்தில் LED விளக்குகளாக மாற்றியதால் தேவையற்ற நிலையில் உள்ள 150 W Light-1139 எண்ணமும், 250W Light 1250 எண்ணமும் மற்றும் 400 W light – 232 எண்ணமும் ஆக மொத்தம் 2621 எண்ணம் Light Fitting ஆகியவற்றை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி பகிரங்க ஏலம் விடுவதற்கும், இதற்கான அறிவிப்பு விளம்பரத்தினை பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதற்கு ஏற்படும் விளம்பர செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி பகிரங்க ஏலம் விட மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) விளம்பர கட்டணம் செலுத்துவதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.297/2019/எம்சிஇ6)
</td>
<td>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>31.03.2020</td>
<td>548.</td>
<td>
இம்மாநகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் மற்றும் திருவையாறு பேருந்து நிலையம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதால் அங்குள்ள ஆங்கிள்கள், டின்சீட், போல்ட் நட், பழுதடைந்த இரும்பு இருக்கைகள் ஆகிய பொருட்களை பொது ஏலம் மூலம் உள்ளவை உள்ளபடியே பொருட்களை எடுத்துச்செல்லும் பணிக்கு 18.12.2019 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>வ.எண்</td><td>ஏலம் கோரியவர்களின் பெயர்</td><td>உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூபாய்</td></tr>
<tr><td>1.</td><td>M/s. Samy Construction, 41 Annai Sathiya nagar,Collectorate Post, Erode – 638 011</td><td>1,28,000/–</td></tr>
<tr><td>2.</td><td>Thiru R.P.Periyasamy&Co, 143/3, Sri Ganapathi Garden, Palayapalayam, Perunthirai road, Erode-638011</td><td>1,40,000/–</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற பொது ஏல தொகையில் வ.எண்.2ல் கண்டுள்ள கூடுதலாக ரூ.1,40,000/– உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரியுள்ள Thiru R.P.Periyasamy & Co, 143/3, Sri Ganapathi Garden, Palayapalayam, Perunthirai road, Erode என்பவருக்கு வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) கூடுதலாக பொது ஏல ஒப்பந்தப்புள்ளி கோரிய Thiru R.P.Periyasamy & Co, 143/3, Sri Ganapathi Garden, Palayapalayam, Perunthirai road, Erode என்பவரது தொகை ரூ.1,40,000/—ஐ மாமன்றம் ஏற்கலாம்.
2) மேற்படி விளம்பரத்திற்கு பத்திரிக்கை விளம்பர கட்டணம் செலவினத்தையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.15378/2019/எம்சிஇ6)

---

31.03.2020

**549.** தஞ்சாவூர் பெரியகோவில் அருள்மிகு பெருவுடையார் திருக்குடமுழுக்கு விழா 05.02.2020 அன்று நடைபெறுவதையொட்டி சுமார் 10 இலட்சம் பொது மக்கள் வரப்பெறுவர் என எதிர்பார்க்கப்படும் நிலையிலும் மேற்படி திருக்குடமுழுக்கு விழாவிற்கு மின் பணி, குடிநீர் வசதி மற்றும் சுகாதாரப்பணிக்கு சுமார் 1000 நபர்கள் அருகில் உள்ள பேரூராட்சி/நகராட்சி/மாநகராட்சியிலிருந்து வரப்பெறவுள்ளதாலும் தொற்றுநோய் ஏற்படா வண்ணம் பாதுகாக்கவும் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளவும், மேற்படி பொருட்களை தமிழ்நாடு மருந்து கழக பொது மேலாளர் (நிர்வாகம்) அவர்களின் அங்கீகாரம் பெற்ற M/s. Coromandel International Ltd., Telangana மற்றும் M/s. Paramount Pesticides Limited, Chennai-17 நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கிடவும், அதற்காகும் செலவினம் ரூ.4,94,184/—க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பொருளின் பெயர் | தேவையான அளவு | விலை விகிதம் (லிட்டர் ஒன்றுக்கு) | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | M/s.Coromandel International Ltd., Telangana | RC006-Malathion Technical Grade 95% | 200 Litre | ரூ.369/— GST- 18% | ரூ.87,084/— |
| 2 | M/s. Paramount Pesticides Limited, Chennai | RC002-Pyrethrum 2% Extract | 200 Litre | ரூ.1,100/— GST – 18% | ரூ.2,59,600/— |
| 3 | M/s. Paramount Pesticides Limited, Chennai | RC007 Temephos Emulsifiable 50% EC | 200 Litre | ரூ.625/— GST – 18% | ரூ.1,47,500/— |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கல் உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம்.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | 3) மேற்படி செலவினத்தை CSR நிதி / பொது நிதி 2019–2020ன் கீழ் மேற்கொள்ள வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.15645/2019/எச்8) | |
| 31.03.2020 | 550. | இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை, சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.1692/S2/VCII/2020 நாள் 06.03.2020–ல் தெரிவித்துள்ளதற்கிணங்கவும் மற்றும் 06.03.2020 அன்று நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நகர்நல அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படியும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்புப்பணி மேற்கொள்ள ஏதுவாக டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் பொது மக்களிடம விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள ஏப்ரல் 2020 மாதம் முதல் 59 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 210 களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்திட ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை உத்திரவு ந.க.எண்.20899/2019/ஜி2, நாள் 28.09.2019–ம் தேதிய உத்திரவில் தெரிவிக்கப்பட்ட விலைப்புள்ளி விகிதத்துடன் EPF & ESI சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.55,50,720/–க்கு (ரூபாய் ஐம்பத்து ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று இருபது மட்டும்) (210X59X448) மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம்.<br>3) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை 2020–21ம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3676/2020/எச்8) | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| 31.03.2020 | 551. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வலுவலக உத்திரவின்படி 01.03.2017 முதல் 01.03.2020 வரை மூன்று வருட காலத்திற்கு Relyon Facility Services Pvt. Ltd., சென்னை நிறுவனத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 250 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. தற்போது ஒப்பந்தக்காலம் 01.03.2020 உடன் முடிவடைகிறது. எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை மேற்கொள்ள காலஅவகாசம் தேவைப்படுவதால் மேற்படி ஒப்பந்தத்தை 02.03.2020 முதல் 31.05.2020 வரை 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் (91X250X501) ரூ.1,13,97,750/–க்கு (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சத்தி தொன்னூற்றி ஏழாயிரத்தி எழுநூற்றி ஐம்பது மட்டும்)–க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | (ந.க.எண்.4296/2017/எச்8) | |
| 31.03.2020 | 552. இந்திய அரசால், தஞ்சாவூர் மாநகராட்சியினை Smart Cityயாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் செயற்படுத்தப்படவுள்ளது. அதன் ஒரு பகுதியாக மேற்படி திட்டத்தில், தற்போது நிலையில் செயல்பட்டு வரும் 'இராஜராஜன் வணிக வளாகம்' இடம் தேர்வு செய்யப்பட்டு அதில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) பணியினை 'தனியார் ஆலோசனை நிறுவனம்' மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தனியார் ஆலோசனை நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு நகர் ஊரமைப்பு துறையின் வடிவமைப்பு வரைபட ஒப்புதல் பெற நகர் ஊரமைப்பு துறையினருக்கு அனுப்பி வைத்திட மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>'இராஜராஜன் வணிக வளாகத்தினை' அகற்றி புதிதாக அபிவிருத்தி செய்ய தனியார் ஆலோசனை நிறுவனம் தயார் செய்து கொடுத்த வரைபடத்தினை நகர் ஊரமைப்பு துறையினருக்கு வடிவமைப்பு வரைபட அனுமதிக்கு அனுப்பி வைக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.2138/2020/எப்1) | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| 31.03.2020 | 553. சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை)<br>துணை விதிகள், 2018<br>சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014)–37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.<br>தஞ்சாவூர் மாநகராட்சி சட்டம், 2014, அத்தியாம் 15 பிரிவு 432 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், தஞ்சாவூர் மாநகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.<br>**அத்தியாயம்–1**<br>**முதனிலை**<br>1) குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.– இந்த துணை விதிகள் தஞ்சாவூர் | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

மாநகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2) பொருள் வரையறைகள்.– இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

(i)"சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

(ii)"விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் “21”ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைபடம் என்று பொருள்படும்;

(iii)"விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

(iV)"திட்டம்" என்பது சட்டத்தின் “38” ஆம் பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

(V)"நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

3.(1) பாத சாரிகளின் நடமாட்டம் (PEDESTRAIN FLOW) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து தஞ்சாவூர் மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள்

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.<br>(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.<br>(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.<br>(iv) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.<br>(V) ஒரு சாலையில் விற்பனை அனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.<br><br>(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.<br>(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.<br>(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>**(4)சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களில்,**<br>(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கும்,<br>(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு,<br>(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,<br>(iv) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கு,<br>(v) பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.<br>(vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்<br>(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் சந்திக்கும் இடங்களில் அனைத்து பக்கங்களில் 10 மீட்டர் நீளத்திற்கு<br>(Viii) ‘எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும்<br>வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கு. | |

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

குறிப்பு– கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைப்பு பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாட்டத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iv) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது.

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது.

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது. திடக்கழிவுகளை பிரித்து கையாள வேண்டும்.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

| | | |
|---|---|---|
| | (ii) விற்பனை செய்யும் இடத்தில் சான்றிதழ் காட்சிக்கு எப்போதும் வைக்கப்படவேண்டும்.<br><br>(iii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.<br>(iV) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், சுகாதாரமாகவும் நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,<br>(V) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,<br><br>(Vi) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.<br>(Vii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ஐ கடைப்பிடிக்க வேண்டும்,<br>(Viii) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016–ஐ கடைப்பிடிக்க வேண்டும்,<br>(ix) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்<br>(x) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.<br>**அத்தியாயம்–3**<br>**கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்**<br>**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.<br>**(2)** உப விதி **(1)**ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும். | |

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம்– வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம்– வருடத்திற்கு ரூ.1800/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம்– வருடத்திற்கு ரூ.3600/– |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம்– வருடத்திற்கு ரூ.500/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம்– வருடத்திற்கு ரூ.1000/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம்– வருடத்திற்கு ரூ.1800/– |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.3000/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.375/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.1500/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.250/– |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

**7. பராமரிப்பு கட்டணம்,– (1)** சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)–யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு ரூ.200/– வீதம் ஆண்டிற்கு ரூ.2400/– செலுத்தப்பட வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 10 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும். (மாநகராட்சி/நகராட்சிகளின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின்படி முடிவு செய்யப்பட வேண்டும்,

**8. அபராதம் விதித்தல் –** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது, மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனையாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்– 4

## பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.–(1)** நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை

| | | |
|---|---|---|
| | செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954–ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.<br>**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,–**<br>(1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.<br>(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.<br>(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.<br>(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.<br>(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின்உபயோகத்தை தடுக்கப்படும்.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7276/2015/எம்சிஎப்5) | |
| 31.03.2020 | 554. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.34 மானம்புச்சாவடி V.P.கோவில் சன்னதி தெருவில் மண்டலம்–V, மாரிக்குளத்தில் இருந்தும், பம்பிங் நிலையத்தில் இருந்தும் பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் பிரதான குழாய் சேதமடைந்து கழிவு நீர் சாலைகளில் வழிந்தோடி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. மேலும் அப்பகுதியில் மூன்று பள்ளிகள் உள்ளதால் காலை நேரத்தில் பள்ளி செல்லும் குழந்தைகள் பாதிப்படையக்கூடும் நிலை உள்ளதால், எனவே பொது மக்களின் நலன் கருதி பழுதடைந்த சாக்கடை PSC பிரதான குழாயை மாற்றி (600 mm dia) புதிய பிரதான குழாய் பதிக்கும் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4,00,000/–ஐ (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.4,00,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3008/2020/எம்சிஇ4) | |

நாள் : 03.04.2020
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ பு.ஜானகி இரவீந்திரன்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.

// உண்மை நகல் //

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

4) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது. (முகாம் அலுவலகம்)
5) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
6) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.